# கலைஞர் கட்டிய வள்ளுவர் கோட்டத்தில் இளைஞரணியின் அறிவுத் தேரோட்டம்!

ஒவ்வொரு கல்லாகப் பார்த்துப் பார்த்து வானுயர் வள்ளுவர் கோட்டத்தை தமிழ்நாட்டின் தலைநகரில் வடிவமைத்தவர் அப்போது முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர். பல ஆண்டுகளாக ஓடாமல் இருந்த திருவாரூர் தேரை தன் ஆட்சிக்காலத்தில் ஓட்டியவர் கலைஞர். அந்தத் தேர் வடிவில் சென்னையில் வள்ளுவர் கோட்டத்தை அமைத்தார். உயர்ந்து நின்ற கோட்டத்தைக் கண்டார். திறப்பு விழாவுக்குத் தேதியும் குறித்தார். நெருக்கடி நிலையை எதிர்த்ததால் அவரது ஆட்சி கலைக்கப்பட்டது. ஆளுநர் ஆட்சியில் குடியரசுத் தலைவர் அந்தக் கோட்டத்தைத் திறந்து வைத்த போது, அதைக் கட்டமைத்த கலைஞருக்கு உரிய அழைப்பில்லை. என்ன பாடுபட்டிருக்கும் அவரது உள்ளம்?

தன் உணர்வுகளை உடன்பிறப்புகளுடன் பகிர்ந்து கொள்வதுதானே கலைஞரின் உள்ளம். முரசொலியில் கடிதம் எழுதினார். 'கோட்டம் திறக்கப்படுகிறது குறளோவியம் தீட்டப்படுகிறது' என்று தலைப்பிடப்பட்ட அந்தக் கடிதத்தின் இறுதிப் பகுதியில், "இனிய திருமண விழா நடைபெறும்போது தாலி கட்டும் காட்சியினைக் காண முடியாமல், மணப்பந்தலுக்கு வெளியே நிற்கின்ற தாயின் மனதில் ஒருவிதத் தவிப்பு இருந்தாலும், தன் அன்புச் செல்வத்துக்கு நடைபெறும் மணவிழா குறித்த மகிழ்ச்சி பொங்கிடத்தானே செய்யும் என் தங்க உடன்பிறப்பே அந்தத் தாயின் மகிழ்ச்சியைத்தான் நான் பெறுகிறேன் இன்று" என்று குறிப்பிட்டிருப்பார்.

**முத்தமிழறிஞர் கலைஞர் இன்றிருந்தால், அந்த வள்ளுவர் கோட்டத்தின் பொன்விழா ஆண்டில், கழகத்தின் இளைஞரணி அதே வள்ளுவர் கோட்டத்தில் நடத்திய அறிவுத் திருவிழா கண்டு அகமகிழ்ந்து, உணர்ச்சி மிகுந்த கடிதத்தை நிச்சயம் எழுதியிருப்பார். வள்ளுவர் கோட்டத்தை சுற்றுலாப் பயணிகளின் பொழுது போக்கு இடமாக கலைஞர் கட்டியெழுப்பவில்லை. திருக்குறளின் பெருமையும் தமிழ் இலக்கியம்பண்பாட்டின் அருமையும் உலகின் பல நாடுகளிலிருந்து இங்கு வருபவர்களிடம் போய்ச் சேர வேண்டும் என்ற இலட்சிய நோக்கத்துடன் அதனை அமைத்தார். தமிழ் மொழி சார்ந்ததமிழ்நாட்டின் சிறப்புகளை எடுத்துக் கூறக்கூடிய ஆய்வரங்குகள் நடைபெறவேண்டும் என விரும்பினார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் கட்டப்பட்டு, திராவிட நாயகர் முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களால் புதுப்பிக்கப்பட்டுள்ள வள்ளுவர் கோட்டத்தில், துணை முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான இளைஞரணி கலைஞரின் எண்ணத்தை, அறிவுத் திருவிழா என்று பெயர் சூட்டப்பட்ட இருநாள் நிகழ்வுகளின் வாயிலாக நிறைவேற்றிக் காட்டியிருக்கிறது.**

நவம்பர் 8, 9 ஆகிய இருநாட்களும் நடைபெற்ற அறிவுத் திருவிழாவில், முற்போக்கு புத்தகக் காட்சி, புத்தக வெளியீட்டு விழா, கருத்தரங்கம், வரலாற்றுப் புகைப்படக்காட்சி என நிகழ்வுகள் நிறைந்த பொழுதுகள், பொருள் பொதிந்தனவாக அமைந்தன. தி.மு.க. எனும் அரசியல் பேரியக்கம் 75 ஆண்டுகளைக் கடந்து வீறுநடை போடும் நிலையில், அதன் வரலாற்றை இன்றைய தலைமுறையினரும், ஆய்வு மாணவர்களும் தெரிந்துகொள்ளும் வகையில் ஏறத்தாழ 1200 பக்கங்களில் 'காலத்தின் நிறம் கருப்பு சிவப்பு' என்கிற கட்டுரைத் தொகுப்பை துணை முதலமைச்சர்இளைஞரணிச் செயலாளர் தலைமையிலான குழு உருவாக்கியுள்ளது. அதனை வள்ளுவர் கோட்டத்தில் 8-11-2025 அன்று வெளியிட்டு வாழ்த்தினார் முதலமைச்சர், நம் கழகத் தலைவர் அவர்கள்.



கழகத்தின் மூத்த நிர்வாகிகள், திராவிட இயக்க எழுத்தாளர்கள், ஆய்வாளர்கள், சமூக செயற்பாட்டாளர்கள், கலைஇலக்கிய பங்களிப்பாளர்கள், தோழமைக் கட்சியினர், இந்திய அளவிலானத் தலைவர்கள் உள்ளிட்ட பலரும் எழுதியுள்ள கட்டுரைகள், நேர்காணல்கள் அடங்கிய வரலாற்று ஆவணமான அந்தத் தொகுப்பு வெளியிடப்பட்டதுடன், வள்ளுவர் கோட்டம் வளாகத்தில் முற்போக்கு புத்தகக் காட்சியையும் கழகத் தலைவர் திறந்து வைத்தார்.

**ஆர்வம் நிறைந்த இளைஞர்களை ஆர்வக்கோளாறுகளாக மாற்றிவிடக்கூடிய ஆபத்தான சக்திகள் ஊடுருவியுள்ள நிலையில், இளைஞர்களை சரியான முறையில் அரசியல்படுத்துவதற்கேற்ற வகையிலான புத்தக அரங்குகள் நிறைந்த திருவிழா இது.**

பெரியார், அண்ணா, கலைஞர் போன்ற திராவிட இயக்கப் படைப்பாளிகளின் புத்தகங்களுடன், அம்பேத்கரியமார்க்சியபெண்ணிய சிந்தனை அடிப்படையிலான புத்தகங்களும் இந்தப் புத்தகக் காட்சியில் இடம்பெற்றுள்ளன. அதனால்தான், "கருப்புசிவப்புநீலம் இவை மூன்றும் இணைந்தால் எந்தக் காவியும் நம்மை எதுவும் செய்ய முடியாது" என்று புத்தக வெளியீட்டு விழாவில் கழகத் தலைவர் குறிப்பிட்டார்.

திராவிடம் என்பது மறுக்கப்படும் உரிமைகளை மீட்டெடுக்கும் கருத்தியல். அதற்கானப் போராட்டங்களை முன்னெடுத்து வென்று காட்டியதுதான் திராவிட இயக்கம். அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வளர்ச்சிக்குப் பெயர்தான் திராவிட மாடல். அந்த திராவிட மாடல் அரசின் துணை முதலமைச்சர், முற்போக்கு எண்ணம் கொண்ட அனைத்து அரசியல் இயக்கங்களின் பங்களிப்பும் இருக்க வேண்டும் என்ற உன்னத நோக்கத்துடன் புத்தகக் காட்சியையும், இரு நாட்கள் நடைபெற்ற கருத்தரங்கத்தையும் ஒருங்கிணைத்திருந்தார்.

நவம்பர் 8ஆம் நாள் கழகப் பொதுச்செயலாளர் மொழிப்போர் வீரர் அமைச்சர் துரைமுருகன் அவர்கள் கழக வரலாற்றுப் புகைப்படக் கண்காட்சியைத் திறந்து வைக்க, அதனைத் தொடர்ந்து கழகத் தலைவர் அவர்கள் புத்தகத்தை வெளியிட்ட பிறகு, 'இரு வண்ணக் கொடிக்கு வயது 75' என்ற தலைப்பிலான கருத்தரங்கத்தின் முதல் அமர்வு தொடங்கியது. தி.மு.க.வின் பொதுக்கூட்டங்கள் மாலை நேரக் கல்லூரிகள் என்றால், தி.மு.க. நடத்தும் மாநாடுகளும் கருத்தரங்குகளும் திறந்தவெளிப் பல்கலைக்கழகங்கள். ஒன்றும் அறியாத பாமரர்களும் அரசியல் தெளிவு பெறுவார்கள். மெத்தப் படித்ததாக நினைத்திருப்போரும்கூட, இதை நாம் அறியாமல் போய்விட்டோமே எனும் அளவில் புதிய செய்திகளைத் தெரிந்து கொள்வார்கள்.



**கோவி.லெனின்**
**தி.மு.க. தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர்**

இரண்டு நாட்கள்பத்து அமர்வுகள்44 சொற்பொழிவாளர்கள் கொண்ட கருத்தரங்கம், முக்கால் நூற்றாண்டு கால கழக வரலாற்றையும், அதற்கு முன்னதாக செயலாற்றிய திராவிட இயக்கங்களின் பங்களிப்பையும் இளைய தலைமுறைக்கு எடுத்துரைக்கும் வகையில் அமைந்திருந்தது. ஆதிக்கத்தை எதிர்த்து நாம் சாதித்தது என்ன, உரிமைகளை மீட்டெடுக்க நாம் நடத்திய போராட்டங்கள் எப்படிப்பட்டவை, தமிழர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த திராவிட இயக்கங்கள் கையாண்ட உத்திகள் எத்தகையவை, சமூக நீதியால் விளைந்த பலன்கள் என்னென்ன, சட்டமன்றத்திலும் நாடாளுமன்றத்திலும் நம்முடைய பங்களிப்பு என்ன, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு செய்தவை யாவை, தவிர்க்க முடியாத சக்தியாக இந்திய அளவில் உயர்ந்து நிற்பது எதனால், தலைமுறைகள் தாண்டியும் காலத்திற்கேற்ற செயல்பாடுகள் கொண்ட இயக்கமாக இருப்பது எப்படி என்பன உள்ளிட்ட அனைத்தையும் விவாதிப்பதற்கும், விரிவாக எடுத்துக் கூறுவதற்குமான களமாக அமைந்தது கருத்தரங்கம்.

கழகத்தின் துணைப் பொதுச்செயலாளர்கள் தொடங்கி இளைஞரணியால் வார்த்தெடுக்கப்பட்ட இளம் பேச்சாளர்கள் வரை கருத்தரங்கில் உரையாற்றினர். இரு வண்ணக் கொடிக்கு வயது 75 என்றாலும் அது 25 வயது இளையதலைமுறையின் கைகளில் கொள்கை உணர்வுடன் பறக்கிறது என்பதை கருத்தரங்கம் உணர வைத்தது.

**தேர்தல் திருவிழாவுக்குத் தயாராகும் நிலையில், அறிவுத் திருவிழாவை இளைஞரணிச் செயலாளர் முன்னெடுத்தார். வாக்கு அரசியலைக் கடந்து, ஒவ்வொரு தமிழரின் வளர்ச்சி மிகுந்த வாழ்க்கைக்கான அரசியலையும் தி.மு.க. முன்னெடுக்கிறது என்பதை அவரது செயல்பாடுகள் உணர்த்தின. முத்தமிழறிஞர் கலைஞரின் மூத்த பிள்ளையான முரசொலியில் வரலாற்றுச் செய்திகளை எளிமையாக எடுத்துரைக்கும் பாசறைப் பக்கம், திராவிட இயக்க சாதனைகளை நூல்களாக வெளியிடும் முத்தமி ழறிஞர் பதிப்பகம், ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் இளைஞரணி சார்பில் நூலகம், அவற்றுக்கான வாசகர் வட்டம், 200 இளம்பேச்சாளர்கள் தேர்வு, அவர்களுக்குரிய பயிற்சிகள் அளித்து மேடையேற்றம், இளைஞரணியினருக்கு திராவிட இயக்கப் பயிற்சிப் பாசறை, சமூக வலைத்தளப் பயிற்சி என ஒவ்வொன்றையும் சிறப்பாக நிறைவேற்றியிருக்கிறார். செயல்திறன் மிக்க இளைய பட்டாளத்தையும் அதற்கான கொள்கைப் படைக்கலன்களையும் உருவாக்கியிருக்கிறார் இளைஞரணிச் செயலாளர்.**

அடித்தளம் வலுவாக இருந்தால்தான் கோபுரம் உயர்ந்து நிற்கும். கொள்கை அடித்தளம். கோபுரம் இயக்கம். ஒவ்வொரு தொண்டரும் கொள்கையைத் தெளிவாக உணர்ந்துகொண்டு கோபுரமான இயக்கத்தைத் தாங்கி நிற்க வேண்டும் என்ற நோக்கத்தில் அறிவுத் திருவிழாவ சிறப்பாக நடத்தி முடித்திருக்கிறார். அவருக்கு உறுதுணையாக இருந்த இளைஞரணி நிர்வாகிகள், அன்பகம் குழுவினர், இரண்டு நாட்களும் வள்ளுவர் கோட்ட வளாகத்தில் குழுமிய மாநிலந் தழுவிய இளைஞரணியினர் என அனைவரிடமும் உத்வேகத்தை காண முடிந்தது. உணர்ச்சி மிகுந்த கொள்கை முழக்கங்கள் வள்ளுவர் கோட்ட வளாகத்தில் ஒலித்துக்கொண்டே இருந்தன.

திருவாரூர் தேர் வடிவில் கோட்டத்தை அமைத்தார் கலைஞர். வள்ளுவர் கோட்டம் தேர், கல்லால் வடிக்கப் பட்டது. அது ஓடாது என்பது அவருக்குத் தெரியும். அதனால் தேரில் தொங்குகிற தொம்பைகள் எனப்படும் வண்ணத் தோரணங்களை மட்டும், திருவாரூர் தேரில் உள்ளது போலவே துணியினால் செய்து அமைத்தார். அந்தத் தோரணங்கள் காற்றில் அழகாக அசையும். தேரை அண்ணாந்து பார்க்கும்போது, மேலே மேகங்கள் தவழும். காற்றில் ஆடும் தோரணங்களையும், வானில் நகரும் மேகங்களையும் சேர்த்துப் பார்க்கும்போது, தேர் ஓடுவது போலவே தெரியும். கல் தேரையும் அசைய வைக்கும் விந்தையை தன் கலைத் திறனால் உருவாக்கியவர் கலைஞர்.

முத்தமிழறிஞர் கலைஞர் கட்டிய வள்ளுவர் கோட்டத்தில், மாண்புமிகு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் கட்டிக் காத்து வளர்த்த இளைஞரணி, இன்றைய இளைஞரணிச் செயலாளரின் முன்னெடுப்பில் அறிவுத் தேரோட்டத்தை நடத்தியிருக்கிறது. இரண்டு நாள் நிகழ்வுகளுடன் அது நிறைவடைந்து விடவில்லை. நவம்பர் 16ஆம் நாள் வரை தொடர்கிறது முற்போக்கு புத்தகக் காட்சி. அங்கும் நாள்தோறும் கலை நிகழ்ச்சிஉரையரங்கம் என அறிவுத் தேரோட்டம் தொடர்கிறது.

---

### ஈரோடு தெற்கு மாவட்ட

## மாணவரணி துணை அமைப்பாளர் சி.ஏ.கார்த்திகேயன் திருமண விழா!

### அமைச்சர் சு.முத்துசாமி – வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. வாழ்த்துரை!

*ஈரோடு, நவ. 12 -*

*கழக தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான தளபதி மு.க.ஸ்டாலின், கழக இளைஞர் அணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆகியோர்களின் நல்வாழ்த்துக்களுடன் ஈரோடு தெற்கு மாவட்டம், மாநகர பிரதிநிதி அம்பேத்கர் - அ.சித்ரா ஆகியோரின் மகனும் ஈரோடு தெற்கு மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளருமான சி.ஏ.கார்த்திகேயன், கே.ராஜேந்திரன் - ஆர்.ஜோதிமணி ஆகியோரின் மகள் ஆர்.கண்மணி ஆகியோரின்திருமணவிழா(ஐப்பசி மாதம் 30 நாள்) 16.11.*



*2025 ஞாயிற்றுக்கிழமை காலை 7.45 மணிக்கு மேல் 8.45 மணிக்குள் கரூர் பஸ்நிலையம்அருகில்உள்ளசரஸ்வதி வெங்கட்ராமன் ஏசி மஹாலில் நடைபெற உள்ளது.*

*திருமண விழாவில் ஈரோடு தெற்கு மாவட்ட கழக செயலாளரும், வீட்டு வசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சருமானசு.முத்துசாமி, கரூர் மாவட்ட கழக செயலாளரும், மேற்கு மண்டல பொறுப்பாளரும், முன்னாள் அமைச்சருமான வி.செந்தில்பாலாஜி ஆகியோர் வாழ்த்துரை வழங்க உள்ளனர்.*

*மேலும் ஈரோடு மாநகர கழக செயலாளர் மு.சுப்ரமணியம், ஈரோடு மாநகராட்சிமேயர்நாகரத்தினம், நாடாளுமன்ற,சட்டமன்ற, மாமன்ற உறுப்பினர்கள், ஈரோடுதெற்கு மாவட்டம், கரூர் மாவட்டம்மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர் கழகநிர்வாகிகள்,அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழகஉடன்பிறப்புகள், ஆன்றோர், சான்றோர்கள் உள்ளிட்ட பலர் மணமக்களை வாழ்த்துகின்றனர்.*



தருமபுரி கிழக்கு மாவட்ட பொறுப்பாளர் வழக்கறிஞர் ஆ.மணி எம்.பி. யின் ஆலோசனைப்படி அரூர் நகர கழக செயலாளர் முல்லைரவி தலைமையில் S.I.R.படிவத்தில் வாக்காளர் விவரம் நிரப்புவது உள்ளிட்ட கழக பணிகள் குறித்த அரூர் நகர தி.மு.க. BLA 2 கூட்டம் நகர திமுக அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட துணை செயலாளர் சி.கிருஷ்ணகுமார், பொதுக்குழு உறுப்பினர் எஸ்.கலைவாணி, தேர்தல் பணிக்குழு பொறுப்பாளர் செல்வதயாளன், ஐ.டி.விங் கு.தமிழழகன், நகர நிர்வாகிகள் காதர்பாஷா, தீ.வின்னரசன், மோகன், மதியழகன், சென்னகிருஷ்ணன், திருவேங்கடம் மற்றும் வார்டு செயலாளர்கள், BLA2 க்கள் கலந்து கொண்டனர்.

---

### பெங்களூருவில்

## திருமதி துர்கா ஸ்டாலின் எழுதிய 'அவரும் நானும்' நூல் வெளியீடு!

### டாக்டர் ஜெய.ராஜமூர்த்தி சிறப்புரை! போர்முரசு கதிரவன் ஏற்பாடு!



பெங்களூரு, நவ. 12-

கர்நாடக மாநிலம் பெங்களூருவில், கர்நாடக மாநில தி.மு.க. இலக்கிய அணி சார்பில், திருமதி துர்கா ஸ்டாலின் அவர்கள் எழுதிய "அவரும் நானும்" பாகம் 2 நூல் அறிமுக விழா நவம்பர் 10, 2025 அன்று காலை பெங்களூரு-வில் அமைந்துள்ள வேளாண் பல்கலைகழக கூட்டரங்கில் கருநாடக மாநில தமிழ் பத்திரிக்கையாளர்கள் சங்கத் தலைவர் முத்துமணி நன்னன் வரவேற்புரையில் மாநில இலக்கிய அணி செயலாளர் போர்முரசு கதிரவன் ஏற்பாட்டில் நடைபெற்றது.

இவ்விழாவில் மருத்துவர் ஜெய.ராஜமூர்த்தி (மேனாள் இயக்குனர் - மருத்துவம் மற்றும் ஊரகநலப் பணிகள்) கலந்து கொண்டு நூலினை அறிமுகம் செய்து வைத்து உரையாற்றினார்.

தலைமை இலக்கிய அணி பொருளாளரும், சோழிங்கநல்லூர் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளருமான நா.சந்திரபாபு கலந்து கொண்டு சிறப்பித்து மகிழ்ந்தார்.

மேலும் கருநாடக மாநில திராவிட முன்னேற்ற கழக அவைத் தலைவர் மா.பெரியசாமி, மாநில பொருளாளர் தட்சிணாமூர்த்தி, மாநில மகளிர் அணி செயலாளர் திருமதி சற்குணம் இளமதி, மாநில இளைஞர் அணி துணை செயலாளர் முருகானந்தம், முன்னாள் தொ.மு.ச. துணை செயலாளர் ஆ.கரிகாலன் மற்றும் தங்கவயல் கரிகாலன், டாக்டர் அம்பேத்கர் சட்டக் கல்லூரி அறக்கட்டளை குழுமத்தைச் சார்ந்த திருமதி வழக்கறிஞர் பா.பிரதிஷ்டா ராமமூர்த்தி, பா.பிரதிஷ்டா அவர்களின் கணவர் வழக்கறிஞர் ஆர்.பாலமுருகன் உள்ளிட்ட திராவிட முன்னேற்ற கழகத்தின் உடன்பிறப்புக்கள், தமிழ் சொந்தங்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். விழாமேடையில் நூலின் சிறப்பு பிரதியை ரூபாய் 5000/ செலுத்தி பெற்று கொண்டனர். இறுதியாக ஏ.கே. பாபு கரிகாலன் நன்றி கூறினார்.



ஈரோடு மேற்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பெரியார் நகர் மற்றும் வீரப்பன்சத்திரம் வாக்குச் சாவடி முகவர்களின் ஆலோசனைக் கூட்டம் மேற்கு சட்டமன்றத் தொகுதி தலைமைக் கழக தேர்தல் பார்வையாளர் மீனாஜெயக்குமார் கலந்துகொண்டு ஆய்வுபணியினைமேற்கொண்டு ஆலோசனைகள் வழங்கினார். நிகழ்வில் பெரியார் நகர் பகுதிக் கழக செயலாளர் அக்னி சந்துரு, வீரப்பன்சத்திரம் பகுதிக் கழகச் செயலாளர் வீ.சி.நடராஜன் உள்ளிட்ட வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், வாக்குச்சாவடி முகவர்கள் கலந்து கொண்டனர்.